[31st August 1970

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இராஜ இராஜ சோழனின் சிலை நிறுவப்பட்டு வருகிறது. அச்சிலையைத் திறப்பதற்கு சிறப்பு விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. எம். எத்திராஜுலு : அந்தச் சிலையை வைக்க எந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது ? கோயிலுக்குள்ளேயே வைப்பதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறதா அல்லது வெளியே வைப்பதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : சிலை அமைப்புக் குழுவினர், கோயிலினுடைய பிரகாரமாகிய பரந்த வெளியின் உட்புறத்தில் வைக்க வேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால் அந்தக் கோயில் பராமரிப்பு முழுவதும் இந்திய அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ் இருக்கின்ற காரணத்தால், அந்த இடத்தில் வைக்கக் கூடாதென்று அவர்கள் மறுப்புத் தெரிவித்தார்கள். பிறகு வேறு ஒரு இடத்தில் அந்த சிலையை வைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கும் இலாகாவினர் மறுப்புத் தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு தான் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியதன்பேரில், அந்த இடத்தில் வைத்துக் கொள்ளலாமென்று அவர்கள் அனுமதி அளித்தார்கள். இப்போது உள்ளே முதல் கோபுரத்திற்கும் இரண்டாவது கோபுரத்திற்குமிடையே அந்தச் சிலை வைக்கப்பட இருக்கிறது. ஆனால் அந்த இடத்தைப் பார்க்கிறவர்கள் அந்த இடத்தில் வைப்பதைவிட வேறு ஒரு இடத்தில் வைத்தால், மற்றவர்கள் அந்தச் சிலையைப் பார்க்க வசதியாக இருக்கும் என்கிறார்கள். இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சிலையை யாரும் நன்றாகக் கவனித்துக் காண முடியாத அளவுக்கு இருக்கிறது. தற்போது சிலை அங்கே வைக்கப்பட்டு திறப்பு விழாவுக்காக அது காத்துக் கொண்டிருக்கிறது. பலரும் சிலையைக் கோயிலுக்கு வெளியே கொண்டுவந்து நகரத்தில் மக்கள் நன்றாகப் பார்க்கக்கூடிய ஒரு நடு இடத்தில் வைக்கலாம் என்று கருத்துச் சொல்லி வருகிறார்கள். இப்போது அனுமதிக்கப்பட்ட இடம் பார்வைக்கு ஏற்றதாக, கவர்ச்சிக்குரியதாக இல்லை. மேலவை உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்களே கூட இதைப் பற்றிப் பத்திரிகையில் தம் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றி எல்லோரையும் கலந்தாலோசித்து, தகுந்த இடத்தைப் பார்த்து முடிவு செய்யலாம் என்று நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. திறப்பு விழா இன்னமும் நடைபெறவில்லை.

Drought relief funds

*54. *Q.*—Thiru A. R. DAMODARAN (on behalf of Thiru G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether it is a fact that the Tamil Nadu Government have demanded from Government of India a share from the drought relief and special assistance funds proposed in the Central Budget :

(*b*) if so, whether any reply has been received from them ; and

(*c*) the details thereof ?

31st August 1970]

வறட்சித் துயர் தணிப்பு நிதி

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மத்திய அரசு வரவு-செலவுத் திட்டத்தில் திட்டமிடப்பட்ட வறட்சித் துயர் தணிப்பு நிதியிலும், சிறப்பு உதவி நிதியிலும் பங்கு வேண்டுமென்று தமிழ்நாடு அரசு இந்திய அரசிடம் கோரியது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அவர்களிடமிருந்து பதிலேதும் வந்துள்ளதா ?

(உ) அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 1970-71-ம் ஆண்டிற்கான மத்திய வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள 175 கோடி ரூபாய் சிறப்பு உதவி நிதியிலிருந்து நமது மாநிலத்திற்கு எந்தவிதமான உதவியும் தருவதற்கு இதுவரையிலும் இந்திய அரசு மறுத்துக்கொண்டிருந்தது. வறட்சித் துயர் துடைப்பு நிதியைப் பொறுத்த வரையில், தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்களை ஒருவாறாக இதில் இணைக்கலாம் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. எம். எத்திராஜுலு : மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டதைப் போல, நம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டதா ? ஒதுக்கப்படாது இருந்தால், மீண்டும் பிரதம மந்திரியை நேரில் பார்த்து, இதற்கு வேண்டிய நிதியை ஒதுக்கித்தான் தீர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் சந்தித்துப் பேசினார்களா ? அப்படிச் சந்தித்துப் பேசியிருந்தால், ஏதாவது பணம் ஒதுக்குவதற்கு அவர்கள் விருப்பம் தெரிவித்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பிரதம மந்திரியை நேரில் பார்த்துப் பேசுகிறோம். அரசாங்க முறைப்படி கடிதப் போக்குவரத்து மூலமாகவும் பேசுகிறோம். மகாநாட்டில் பேசுகிறோம். பொதுவாக ரூ. 175 கோடி சிறப்பு உதவி நிதி இருப்பதைக்கூட இந்த அரசாங்கத்திற்கு உடன்படாத கருத்தாகச் சொல்கிறோம். 25 ஆயிரம் கோடி அல்லது 24 ஆயிரம் கோடி ரூபாய் அளவில் தயாரிக்கப்பட்டிருக்கிற மிகப் பெரிய நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லாவற்றிற்கும் ஒதுக்கீடு செய்துவிட்டு மொத்தமாக 800 அல்லது 900 கோடி ரூபாயை இவர்கள் உசிதம்போலச் செலவழிக்க வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை நாங்கள் அடிக்கடி தொடர்ந்து கண்டித்து வருகிறோம். இந்த 800 அல்லது 900 கோடி ரூபாயை ''ஸ்பெஷல் அகாமடேஷன்'' என்ற பெயரில் வைத்துக்கொண்டு அந்தந்த மாநிலங்களுக்கு உசிதம்போலக் கொடுக்க அவ்வப்போது சேர்க்கப்படுகிறது. பல்வேறு மாநிலங்கள் பல்வேறு காரணங்களுக்காக நிதி உதவி பெறுகிற வாய்ப்பு பெற்றிருக்கின்றன. தமிழ் நாட்டுக்கும் இப்படிப்பட்ட வாய்ப்பு இருக்கிறது. அதற்கான காரணங்களும் இருக்கின்றன. இதைத் திரும்பத் திரும்ப விளக்கிக் கொண்டிருக்கிறோம். உதாரணமாக ''பே கமிஷன்'' முதலில் நியமிக்கப்படவில்லை. கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது. ஐந்தாவது ஆணைக்குழு பரிந்துரை செய்வதற்கு முன்னால் நாம் அதை நியமிக்கவில்லை. ஆனால்கூட நாம் ''பே கமிஷன்'' நியமித்துவிட்டோம். அதனுடைய அறிக்கை வரப் போகிறது.

ஆனால் ஆணைக் குழுவின் பரிந்துரை வருவதற்கு முன்னால் ''பே கமிஷன்'' நியமிக்கவில்லை என்ற காரணத்திற்காகவே இந்த மாநிலத் திற்குக் கிடைக்க வேண்டிய தொகை கிடைக்கவில்லை. ஏற்கனவே 40 அல்லது 50 கோடி ரூபாயாகும் திட்ட காலத்தில். ஏனைய மா நிலங்கள், கேரளா போன்ற மற்ற மாநிலங்கள் பே கமிஷன் அமைத்து விட்ட காரணத்தால் அவையெல்லாம் சேர்த்துக் கணக்கிடப்பட்டிருக் கின்றன. இப்படிப் புதிய செலவினங்கள் வருவதைத் திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். ஏதோ நல்ல நிலைமை ஏற்படும் என்று நம்பிக்கொண்டிருக்கிறோம்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பு ஆலையில் 25 ஆயிரம் கதிர்களாக விஸ்தரிக்க வேண்டுமென்றும், இலங்கை பர்மாவிலிருந்து வருகிற 300 பேர்களுக்கு அங்கே வேலை வாய்ப்புத் தருவது என்ற அடிப்படையிலும் ரூ. 15 லட்சம் மாநில அரசு கோரி, மத்திய அரசிற்குச் சிபாரிசு செய்திருக்கிறது. நீண்ட காலமாக அது பற்றி இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை. அது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதைப்பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், தகவல் சொல் கிறேன்.

Ceylon Repatriates

*55. *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) the amount paid to repatriate families from Ceylon ;

(*b*) the basis on which the amount has been fixed ;

(*c*) whether the amount is found adequate ; and

(*d*) if not, whether there is any proposal to increase the same ?

இலங்கை அகதிகள்

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதி லளிக்க வேண்டுகிறேன் :

(அ) இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு எவ் வளவு தொகை கொடுக்கப்பட்டது ?

(இ) இத்தொகை எந்த அடிப்படையில் வரையறுக்கப்பட்டது ?

(உ) அத்தொகை, போதுமானது என்று தெரிய வந்ததா ?

(எ) இல்லையெனில், அதனை அதிகரிக்கும் செயற்குறிப்பு யாதேனும் உள்ளதா ?